**தலைப்பு 105 – வெகுசன ஊடக அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வெகுசன ஊடக அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வெகுசன ஊடக அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 03 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 06 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெகுசன ஊடக அமைச்சின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு

அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) இந்த அறிக்கையின் 1.6.1 ஆம் பந்தியின் அவதானிப்புக்கள் தவிர நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் நிதிக்கூற்றுக்கள் இணங்காமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 26 ஆம் திகதிய எஸ்ஏ/எம்ஏஏ/02/01/01 ஆம் இலக்கத்தின் கீழ் 2021/03 இன் 7.9 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டலின் பிரகாரம் நிதிக் காலப்பகுதியின் இறுதியில் ஒவ்வொரு அறிக்கையிடல் நிறுவனத்தாலும் திறைசேரிக்கு அனுப்பப்பட்ட கட்டுநிதி மீதி நிதி நிலைமைக் கூற்றில் உள்ள காசு மற்றும் காசிற்கு சமமான மீதியில் உள்ளடக்கப்படக்கூடாது. எனினும் 2020 ஆம் ஆண்டிற்கான ஒப்பீட்டு புள்ளிவிபரங்களைக் குறிப்பிடும் போது நிதிக் காலப்பகுதியின் இறுதியில் திறைசேரிக்கு அனுப்பப்பட்ட ரூபா 4,771,962 காசு மீதியானது காசு மற்றும் காசிற்கு சமமான சமமானதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | 2021 ஆம் ஆண்டிற்கான கணக்கு தொடர்பாக 2020 ஆம் ஆண்டிற்கான ஒப்பீட்டு புள்ளிவிபரங்களைக் குறிப்பிடும் போது 2021 ஆம் ஆண்டிற்கான புள்ளிவிபரங்களுடன் ஒப்பிடும் வகையில் புள்ளிவிபரங்கள் பதிவுசெய்யப்பட்டதன் காரணமாக இது ஏற்பட்டிருந்தது. | கணக்கிணக்கம் செய்வதற்கு இயலுமானவாறு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்த முன்னைய ஆண்டு தொடர்பான 03 வருமான செலவினக் குறியீடுகளின் ஒப்பீட்டு புள்ளிவிபரங்களுக்கும் முன்னைய ஆண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டுள்ள அத்தகைய தொகைகளுக்கும் இடையே ரூபா 14,646,945 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. மேலும் 03 செலவினக் குறியீடுகள் தொடர்பாக காசுப்பாய்ச்சல் கூற்றில் காணப்பட்ட வேறுபாடு ரூபா 83,884,130 ஆகும். | -மேற்படி- | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிலுவையாக உள்ள வருமானம் தொடர்பாக 2020 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான மீதிக்கும் 2021 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உள்ள மீதிக்கும் இடையே ரூபா 32,966,630 வேறுபாடு காணப்பட்டது. | அமைச்சின் தகவல்களின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டுக்கான நிலுவை வருமானம் ரூபா 20,190,500 ஆக காணப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. மேலும் ரூபா 53,157,130 எனக் குறிப்பிட்டதைக் கண்டறிவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அறிக்கையிடப்படும். | ஆண்டின் இறுதியில் உள்ளவாறான நிலுவை வருமான மீதி மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | நிதி பிரமாணம் 85 (1) மற்றும் நி.பி. 143 (1) மற்றும் 2015 யூலை 20 ஆம் திகதிய திறைசேரி செயலாளரின் 01/2015 ஆம் இலக்க நிதிக் கொள்கைச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானம் சரியாக எதிர்வுகூறப்பட வேண்டும். எனினும், 37 சதவீத வேறுபாடு காணப்பட்டது, ஏனெனில் மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 700,000,000 ஆக காணப்பட்டதுடன் பெறப்பட்ட வருமானம் ரூபா 438,470,000 ஆக காணப்பட்டது. | 2020.03.27 ஆம் திகதிய 2168/09 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் 2006 இன் 11 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 8 ஆம் கட்டளையின் (ஈ) பந்தியின் (iii) ஆம் உருப்படி திருத்தப்பட்டதால் இறக்குமதி செய்யப்பட்ட தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் திரைப்படங்களுக்கு விதிக்கப்பட்ட வரி 2020.03.27 தொடக்கம் 2021.02.09 வரை இரத்து செய்யப்பட்டிருந்தது. கொவிட் 19 நிலைமை மற்றும் நாட்டின் பொருளாதார நெருக்கடி காரணமாக இறக்குமதி செய்யப்பட்ட தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை மேலும் ஒளிபரப்புதல் தொலைக்காட்சி அலைவரிசைகளால் மட்டுப்படுத்தப்பட்டது. இது வரி வருமான வீழ்ச்சிக்கு தாக்கமளித்தது. | வருமான மதிப்பீடுகளை சரியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய ஊடக நிலையத்தின் 03 செலவினக் குறியீடுகளின் மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 7,245,000 தொகை குறைநிரப்பு நிதியேற்பாடுகளாக பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் | தேசிய ஊடக நிலையம் 2021 ஆம் ஆண்டின் முற்பகுதியில் புதிதாக நிறுவப்பட்டதுடன் 2021 ஆம் ஆண்டிற்கான அமைச்சின் பொது நிர்வாகத்திற்கான மதிப்பிடப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட | குறைநிரப்பு நிதியேற்பாடுகள் முறையாக முகாமை செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறித்த நிதியேற்பாட்டில் ரூபா 18,100,000 தொகை நி.பி. 66 மூலம் ஏனைய செலவினக் குறியீடுகளுக்கு மாற்றப்பட்டுள்ளது. | நிதியேற்பாடுகளுக்கு மேலதிகமாக ரூபா 7,245,000 தொகை தேசிய ஊடக நிலையத்தின் செலவினங்களுக்காக திறைசேரியால் குறைநிரப்பு நிதியேற்பாடுகளாக வழங்கப்பட்டது. | |
| (ஆ) | நி.பி. 50 இன் பிரகாரம் நியாயமான முறையில் எதிர்வுகூறக்கூடிய அனைத்து சேவைகளும் மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டு அவை நிதியாண்டின் போது அதன் துறையின் இயலளவிற்குள் காணப்படுகின்றதுடன் மதிப்பீடுகள் இயன்றளவு முழுமையாகவும் சரியாகவும் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும் மதிப்பீடுகளின் வேறுபாடுகள் 100 முதல் 2,156 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டன. | திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் எதிர்பார்த்தவாறு நிறைவேற்றப்படாததாலும், 2021 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொவிட் 19 நிலைமையின் உச்சக்கட்டத்தின் விளைவாக தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம், அலுவலக நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டமை போன்ற காரணங்களாலும் நிதியேற்பாடுகளை முகாமை செய்வதில் சிரமங்கள் காணப்பட்டன. | மதிப்பீடுகள் இயன்றவரை சரியாக செய்யப்பட்டு நிதியேற்பாடுகள் முகாமை செய்யப்பட வேண்டும். |
| (இ) | தேறிய நிதியேற்பாட்டில் 11 சதவீதம் முதல் நூறு சதவீதம் வரையான வீச்சில் ரூபா 511,495,135 கூட்டுமொத்தமான 32 செலவினக் குறியீடுகளின் சேமிப்புகள் காணப்பட்டதுடன் குறித்த நிதியேற்பாடுகளில் ரூபா 278,204,025 தொகை நி.பி. 66 மூலம் ஏனைய செலவினக் குறியீடுகளுக்கு மாற்றப்பட்ட பின்னர் 11 செலவினக் குறியீடுகளில் சேமிக்கப்பட்டிருந்தன. | திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் எதிர்பார்த்தவாறு நிறைவேற்றப்படாததாலும், 2021 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய கொவிட் 19 நிலைமையின் உச்சக்கட்டத்தின் விளைவாக தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம், அலுவலக நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டமை போன்ற காரணங்களாலும் நிதியேற்பாடுகளை முகாமை செய்வதில் சிரமங்கள் காணப்பட்டன. | நிதியேற்பாடுகள் வினைத்திறனாக முகாமை செய்யப்பட வேண்டும். |

**2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டில் தீர்ப்பனவு செய்யப்பட்ட ரூபா 682,135 தொகையான பன்னிரண்டு பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளின் பட்டியலைத் தயாரிக்கும் போது முன்வைக்கப்படாத பொறுப்புக்கள் இருந்தன. அவை இங்கே குறிப்பிடப்பட்டன. | பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் நிதிக்கூற்றுக்களில் சரியாக காட்டப்பட வேண்டும். |

## 2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரின் சான்றுபடுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும். மேலும் அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததை உறுதிப்படுத்தும் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அத்தகைய மீளாய்வுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணங்கள் நி.பி.135 | மீளாய்வாண்டிற்கான நிதி அதிகார கையளிப்பு கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டிற்கு தயாரிக்கப்படும். | நிதி பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் பகுதி (i) I இன் 9 ஆல் திருத்தப்பட்ட | படியை பெற்றிருந்த உத்தியோகத்தரினால் குறித்துரைக்கப்பட்ட நோக்கம் நிறைவடைந்த பின்னர் 10 நாட்களுக்குள் | பதில் வழங்கப்படவில்லை. | சுற்றறிக்கைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | நி.பி. 371 (5) | செயல்நிமித்த உபகட்டுநிதிகள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் 32 நாட்கள் முதல் 150 நாட்கள் வரையிலான காலதாமதத்துடன் ரூபா 332,826 தொகையான உப கட்டுநிதிகள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்த 16 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (இ) | பகுதி I இன் 11.1 ஆல் திருத்தப்பட்ட நி.பி. 756 (6) | ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை எதிர்வரும் ஆண்டின் மார்ச் 31 இற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டுக்குரிய மெய்மையாய்வு அறிக்கைகள் 2022 ஏப்ரல் 27 வரையிலும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் முற்பகுதியில் நாட்டில் நிலவிய சூழ்நிலை காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட பதவியணியினர் கடமைக்கு அழைக்கப்பட்டதாலும், அமைச்சின் புனரமைப்பு பணியின் போது மெய்மையாய்விற்கு நடைமுறைச் சிக்கல்கள் காணப்பட்டதாலும் தாமதங்கள் ஏற்பட்டன. தற்போது 2021 ஆம் ஆண்டுக்கான நடவடிக்கைகள் இறுதி கட்டத்தில் உள்ளன. | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிர்வாகப் பிரிவின் 6 செயற்பாடுகள், ஊடகப் பிரிவின் Asi Disi Peramaga இன் கீழான 7 செயல்பாடுகள் மற்றும் செயல் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட தகவல் உரிமைப் பிரிவின் 4 செயற்பாடுகளின் செயன்முன்னேற்றம் முன்னேற்ற மீளாய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை, இதன் விளைவாக, அச் செயற்பாடுகளின் முன்னேற்றத்தை திட்டத்தின் பிரகாரம் சரிபார்க்க முடியவில்லை. | முன்னேற்ற மீளாய்வு அறிக்கையில் அதனை உள்ளடக்க முடியவில்லை. | செயலாற்றலை பரீட்சிக்கக்கூடியவாறு செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் முன்னேற்ற மீளாய்வு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். |

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட இலக்குகள் அடைந்துகொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செய்திகளை ஒலிபரப்புவதற்காக இணையத்தளங்களை பதிவு செய்வதற்கும் புதுப்பிப்பதற்கும் ஒன்லைன் முறைமையை தயாரித்தல், வானொலி மற்றும் தொலைக்காட்சிகளை ஒளிபரப்புவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்கும் பொறிமுறையை கண்காணித்தல் மற்றும் இலங்கை ரூபவாஹினி சட்டத்தின் திருத்தம் போன்ற செயற்பாடுகள் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | செய்திகளை ஒளிபரப்பு செய்யும் இணையத்தளங்களின் பதிவு நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது, ஏனெனில் பாதுகாப்பு அனுமதி பெறப்பட வேண்டியதுடன் அத்தகைய தளங்களை பதிவு செய்வதற்காக நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட வேண்டும். தொலைக்காட்சிகள் மற்றும் வானொலிகளுக்கான ஒலிபரப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதைக் கண்காணிப்பதற்கு பல்வேறு விடயங்கள் தாக்கம் செலுத்தியிருந்ததுடன் இது எதிர்காலத்தில் சுய ஊடகக் கட்டுப்பாட்டின் அடிப்படையில் ஒரு புதிய சட்டத்தைக் கொண்டுவரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை ரூபவாஹினி சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சட்ட வரைவை உள்ளடக்கிய அமைச்சரவை பத்திரம் அரசியல் ஸ்திரமின்மையின் குழப்பங்கள் காரணமாக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க முடியாமல் போனதுடன் தற்போது மீண்டும் சமர்பிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | திட்டமிட்டவாறு செயற்பாடுகளை முறையாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.3 பெறுகை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டலின் 4.2.2 (அ) இன் பிரகாரம் பெறுகை செயன்முறையின் ஆரம்பம் முதல் இறுதி வரை அனைத்து படிமுறைகளையும் முறையாக விபரிக்கும் பெறுகைக் கால அட்டவணையொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் விரிவான பெறுகைத் திட்டமொன்று அமைச்சால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் விரிவான பெறுகைத் திட்டமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அமைச்சு வளாகத்தின் புனரமைப்பு மற்றும் மறுசீரமைப்பு. | | |
| (i) | பெறுகை வழிகாட்டலின் 4.1 (இ) இன் பிரகாரம் தேவையான நிதியை கொண்டிருக்காமல் பெறுகை நடவடிக்கைகள் தொடங்கப்படக்கூடாது. எனினும், மொத்த மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு ரூபா 79,500,000 ஆக காணப்பட்ட போதிலும் ரூபா 179,483,827 மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கான பெறுகைகள் தொடங்கப்பட்டிருந்ததுடன் ரூபா 84,200,000 நிதியேற்பாடுகள் குறைநிரப்பு நிதியேற்பாடுகள் மற்றும் நி.பி. 66 மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | அமைச்சின் கட்டிடத்தில் இனங்காணப்பட்ட ஆரம்ப தேவைப்பாடுகள் ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டதுடன் அனைத்து புனரமைப்பு நடவடிக்கைகளையும் ஒரே நேரத்தில் மேற்கொள்வதற்கான தேவைப்பாடு மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டது, அதன் தொழில்நுட்ப ஆலோசனை சேவை தொடர்புடைய நடவடிக்கைக்கு வழங்கப்பட்டது. | -மேற்படி- |
| (ii) | அமைச்சின் வளாகத்தை புனரமைத்து அபிவிருத்தி செய்வதற்கான ஒப்பந்தத்திற்காக 12 உப பிரிவுகளின் கீழ் ரூபா 179,483,827 மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு 04 சந்தர்ப்பங்களில் கூறுவிலைகள் கோரப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 113,404,335 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் குறித்த பெறுகையின் தேவைப்பாடு தெளிவாகவும் சரியாகவும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தின் அறிவுறுத்தல்களின் அடிப்படையில் 04 பிரிவுகளின் கீழ் 12 உப பிரிவுகளைத் தெளிவுபடுத்திய பின்னர் கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தன. அரசாங்கத்திற்கு கிடைக்கக்கூடிய நன்மை மற்றும் முழு ஒப்பந்தத்தையும் ஒரு ஒப்பந்ததாரருக்கு நேரடியாக வழங்குவதன் மூலமான வேகம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது, ஏனெனில் இது தாமதம் மற்றும் விலை அதிகரிப்பைத் தவிர்க்க உதவும். | புனரமைப்பு தேவைப்பாட்டை இனங்கண்டு பெறுகைகள் தொடங்கப்பட வேண்டும். |
| (iii) | பெறுகை வழிகாட்டலின் 2.8.1 (ஆ) இன் பிரகாரம் குறித்த பெறுகையுடன் தொடர்புடைய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவில் விடயத்திற்கான நிபுணர் ஒருவர் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தப் பணிக்கான முழு ஆலோசனைச் சேவையும் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தால் வழங்கப்பட்டதுடன் சிவில் பொறியியலாளர்கள், மின்சாரப் பொறியியலாளர்கள் உட்பட அனைத்து தொழில்நுட்பப் பொறியியலாளர்களும் குறித்த நிறுவனத்தில் உள்ளனர். எனவே குறித்த நிறுவனம் மூலம் குறித்துரைக்கப்பட்ட சேவை | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கப்பட வேண்டும். | |
| (iv) | அரசாங்க பெறுகை வழிகாட்டலின் 7.8.4 (ஆ) இன் பிரகாரம் போதுமான கேள்வி பிணை அல்லது போதுமான கேள்வி பிணை வெளிப்படுத்தல் படிவங்கள் காணப்படாதமை பெரிய விலகல்களாக கருதப்பட வேண்டும். எனினும், தொழில்நுட்ப மதிப்பீட்டின் பரிந்துரையை சிறிய விலகலாகக் கருதி வழங்குமாறு அமைச்சின் செயலாளர் ஆலோசனையாளருக்கு அறிவித்திருந்தார். எனினும் குறைந்த கேள்விதாரர் ஆலோசனையாளர்களால் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் இரண்டாவது குறைந்த கேள்விதாரர் 2021 யூலை 20 இல் பரிந்துரைக்கப்பட்டிருந்தார். ஆலோசனையாளர்களின பரிந்துரைகளை கருத்தில் கொள்ளாமல், குறைந்த கேள்விதாரர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டு குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் ஒப்பந்தம் 2021 யூலை 22 இல் வழங்கப்பட்டது. | அமைச்சு வளாகத்தின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்தியின் கீழ், சவ்தேர்ன் கென்ஸ்ட்ரக்ஷன் அன்ட் எஞ்சினியரிங் (பிறைவேட்) லிமிட்டட்டுடன் 2021.08.05 இல் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. உடன்படிக்கையின் மூலப் பிரதி நிர்வாகப் பிரிவின் கட்டிடப் பராமரிப்பு விடயத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டது. | -மேற்படி- |
| (v) | மின்தூக்கியை பொருத்துதல், மின்தூக்கியை வழங்குதல், நிறுவுதல், இயக்குதல் மற்றும் பராமரித்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய சிவில் பொறியியல் நடவடிக்கைகள் தொடர்பான பெறுகைக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த இரண்டு கேள்விகளுக்கும் பதிலளிக்கப்பட்டிருக்காததால் ஆலோசனையாளர்கள் புதிய கேள்வியை கோருவதற்கு பரிந்துரைத்திருந்தனர். எனினும், குறித்த ஒப்பந்தம் | கேள்விக்கு முந்தைய கூட்டத்தில் அமைச்சின் புனரமைப்பு தொடர்பாக 5 கேள்விதாரர்களிற்கு அறிவித்து, திருத்தப்பட்ட விலைகளைப் பெற்றுக்கொண்டு, தொழில்நுட்ப மதிப்பீடுகளை மேற்கொண்டு, பெறுகை குழுவின் அங்கீகாரத்தை பெற்று ஒப்பந்தம் வழங்கப்பட்டது, ஏனெனில் மின்தூக்கியை நிறுவுதல் தொடர்பான நடவடிக்கைகள் கட்டிடத்தின் ஏனைய புனரமைப்பு நடவடிக்கைகளிற்கு ஏற்ப செய்யப்பட வேண்டியதுடன் கொவிட் 19 பரவல் காரணமாக தாமதங்கள் ஏற்படலாம். | ஆலோசனையாளர்களின் பரிந்துரைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | கூறுவிலைகள் கோரப்படாமல் அமைச்சு வளாகத்தின் புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான ஒப்பந்தத்திற்குரிய அதே ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. | |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சருக்கு ஒதுக்கப்பட்ட மூன்று வாகனங்களும் அமைச்சரின் பதவியணியினரிற்கு ஒதுக்கப்பட்ட வாகனமும் 2022 யூலை 20 வரையிலும் அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த வாகனங்களை கையேற்பதற்கான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | வாகனங்களை அமைச்சிற்கு கையளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தேவைக்கு அதிகமாக முற்பணம் பெற்ற 2 நிகழ்வுகளும் பயன்படுத்தாமலேயே முற்பணத்தை முழுமையாக தீர்ப்பனவு செய்த 2 நிகழ்வுகளும் காணப்பட்டன. | செலவின மதிப்பீட்டை சமர்ப்பித்து முற்பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், சம்பந்தப்பட்ட வேலை உறுதியாகச் செய்யப்படுகிறது என்பதை உறுதிப்படுத்திய பின்னர் முற்பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் முற்பணங்கள் வழங்குவதை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | தேவைப்பாட்டின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | ஒளிபரப்பு செய்யப்படும் 49 நிறுவனங்களுக்கு அமைச்சால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் தொடர்பாக பெறவேண்டிய கட்டணங்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுமதிப்பத்திரத்தில் சேர்க்கப்பட்டுள்ள நிபந்தனைகளை திருத்துவதற்கும், தற்போதைய சூழ்நிலைக்கு பொருந்தக்கூடியவாறு சீராக்கங்களை மேற்கொள்வதற்கும், அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கான புதிய அளவுகோல்களைத் தயாரிப்பதற்கும், அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு | அனுமதிப்பத்திரக் கட்டணத்தை முறையாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வருகின்றன. அதன் செயற்பாட்டிற்குப் பின்னர் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | |
| (இ) | வானொலி அலைவரிசைகளை நடத்துவதற்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தில் நடாத்தப்படக்கூடிய வானொலி அலைவரிசைகளின் எண்ணிக்கை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, ஒரே அனுமதிப்பத்திரத்தின் கீழ் 20 நிறுவனங்களில் 7 நிறுவனங்களால் 2 முதல் 5 வானொலி அலைவரிசைகள் நடாத்தப்பட்டிருந்தன. | அனுமதிப்பத்திரம் வழங்கிய ஆரம்ப நாட்களில் (சுமார் 1991 ஆம் ஆண்டு) முதலில் ஒரு அலைவரிசை இருந்ததுடன் பின்னர் அலைவரிசைகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. சமீபத்தில் அனுமதிப்பத்திரம் வழங்கும் போது அலைவரிசைகளின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், செயன்முறையில் உள்ள அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான அளவுகோலில் இந்த பலவீனம் சீர்செய்யப்படும். | நடாத்தப்படக்கூடிய அலைவரிசைகளின் எண்ணிக்கைக்கான நிபந்தனைகள் சேர்க்கப்பட வேண்டும். |
| (ஈ) | 02 தொலைக்காட்சி அலைவரிசைகள் மற்றும் 02 வானொலி அலைவரிசைகள் வரையறுக்கப்பட்ட தனியார் சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பால் நடாத்தப்பட்டிருந்த போதிலும் 1982 இன் 6 ஆம் இலக்க இலங்கை ரூபவாஹினி சட்டம் மற்றும் 1966 இன் 37 ஆம் இலக்க இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன சட்டம் என்பவற்றின் பிரகாரம் வலையமைப்பிற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு அமைச்சினால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வரையறுக்கப்பட்ட தனியார் சுயாதீன தொலைக்காட்சி ஊடக வலையமைப்பு 1979 யூன் 05 ஆம் திகதிய 39/04 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் அரசாங்கத்தால் கையகப்படுத்தப்பட்டது. எனவே அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து ஒளிபரப்பு நிறுவனங்களுக்கும் அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு சரியான ஏற்றுக்கொள்ளக்கூடிய பொறிமுறை பின்பற்றப்பட வேண்டும். |
| (உ) | தொலைக்காட்சி மற்றும் வானொலி ஒலிபரப்பு அனுமதிப்பத்திரத்தை வழங்கும் போது அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்பட்டிருக்காததுடன் வருடாந்தம் அல்லது சரியான நேரத்தில் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கான சரியான முறைமையொன்று அமைச்சால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அனுமதிப்பத்திரக் கட்டணமாகவும், அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்கான கட்டணமாகவும் அறவிடப்படக்கூடிய கணிசமான அளவு வருமானம் அரசாங்கத்தால் இழக்கப்பட்டுள்ளது. | அமைச்சினால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் ஆரம்ப (முதன்மை) அனுமதிப்பத்திரமாக உள்ளதுடன் தொழில்நுட்ப அனுமதிப்பத்திரம் இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் வழங்கப்படுகிறது. இது தொடர்பாக அனுமதிப்பத்திரக் கட்டணமாக வருடாந்த கட்டணம் அறவிடப்படுகிறது. அதன் பிரகாரம் அனைத்து நிறுவனங்களும் ஒளிபரப்பு மற்றும் ஒலிபரப்பிற்காக அரசாங்கத்திற்கு கட்டணம் செலுத்துவதால் அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் கட்டணங்கள் | அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் கட்டணங்கள் என கட்டணங்களை அறவிடுவதற்கான முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | இலங்கை தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் ஊடாக அரசாங்கத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும். எவ்வாறாயினும், அனுமதிப்பத்திரம் வழங்கும் நிறுவனங்களின் வருடாந்த புரள்வில் இருந்து காலாண்டு அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட தொகையை அறவீடு செய்வதற்கு முன்மொழியப்பட்டது. | |
| (ஊ) | அமைச்சால் வழங்கப்பட்டிருந்த கேபிள் TV/ செயற்கைக்கோள்/ IPTV அனுமதிப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் இந்த நாட்டில் ஒரு வெளிநாட்டு அலைவரிசையை ஒளிபரப்புவதற்கான கோரிக்கையின் போது ஒளிபரப்பும் நாட்டில் முறையாக அங்கீகரிக்கப்பட்ட அமைப்பிடமிருந்து பெறப்பட்ட அனுமதிப்பத்திரம் அல்லது அனுமதி இந்த நாட்டில் வெளிநாட்டு அலைவரிசைகளை ஒளிபரப்புவதற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், கேபிள் TV/ செயற்கைக்கோள்/ IPTV ஐ ஒளிபரப்புவதற்கான அனுமதிப்பத்திரம் பெற்ற நிறுவனங்கள், புதிய வெளிநாட்டு அலைவரிசைகளை தமது அலைவரிசைகளின் கொத்தணியில் சேர்க்கும்போது குறித்த தேவைப்பாட்டை பூர்த்தி செய்துள்ளன என்பதை உறுதிப்படுத்துவதற்கு அமைச்சால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் வழங்கப்படவில்லை. | அனுமதிப்பத்திரத்தில் உள்ளடக்கப்பட்ட நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | 1992 ஆம் ஆண்டில் ஒரு ஒளிபரப்பு கம்பனிக்கு அமைச்சினால் வழங்கப்பட்ட தற்காலிக அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளை மீறியதன் காரணமாக நடாத்தப்பட்ட FM அலைவரிசையானது அது கூட்டிணைக்கப்படுவதற்கு முன்னர் அமைச்சினால் தடைசெய்யப்பட்டிருந்தது. 2007 செப்தெம்பர் 14 ஆம் திகதிய அமைச்சின் செயலாளரின் எம்எம்ஜ./டிபி/3 ஆம் இலக்க கடிதம் மூலம் 10 மேலதிக நிபந்தனைகளை உள்ளடக்கி வேறு பெயரில் | பதில் வழங்கப்படவில்லை. | அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்கு சரியான முறைமை பின்பற்றப்பட வேண்டும். |

அலைவரிசை தொடங்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டது. எனினும் தற்காலிக அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்தல் அல்லது புதிய அனுமதிப்பத்திரத்தை வழங்குதல் அல்லது ஏற்கனவே உள்ள அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளை மாற்றுதல் குறித்து கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஏ) தேசிய அபிவிருத்திக்கான ஊடக நிலையம்

பொது மக்களின் கருத்துக்கள் மற்றும் பங்கேற்புடன் அரச கட்டமைப்பில் மூலோபாய தகவல் பரிமாற்றத்திற்காக, 2016 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய அமப/16/1675/702/059 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் தேசிய ஊடக நிலையம் நிறுவப்பட்டுள்ளதுடன் எதிர்பார்த்த நோக்கம் நிறைவேறாததால், 2019 திசெம்பர் 05 ஆம் திகதிய அம்ப/19/3332/203/002 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் குறித்த ஊடக நிலையம் இரத்து செய்யப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் பத்து மடங்கு அரச கொள்கைகளையும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றத்தையும் பொதுமக்களுக்கு சரியாகத் தெரிவிப்பதற்காக 2021 சனவரி 04 இல் நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தேசிய அபிவிருத்திக்கான ஊடக நிலையமாக குறித்த தேசிய ஊடக நிலையம் மீண்டும் நிறுவப்பட்டது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **பரிந்துரைகள்** |
|---|---|---|---|
| (அ) | MMI/5/2/8/2020 LIII-ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 02 ஆம் இலக்க முன்மொழிவின் பிரகாரம் பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்ற அசையா மற்றும் அசையும் ஆதனங்களை பாதுகாப்பு அமைச்சு புதிய பிரிவுக்கு மாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் குறித்த சொத்துக்களை மாற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததுடன் அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 3,511,398 தொகை செலவிடப்பட்டிருந்தது. | பதில் எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும். | அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான நிதி அமைச்சரின் அவதானிப்புக்களின் பிரகாரம் அப்போதைய தேசிய ஊடக நிலையத்தை மூடும் போது குறித்த திணைக்களத்திற்கு கணிசமான அளவு ஊழியர்கள் இணைக்கப்பட்டிருந்ததால் அரசாங்கத் தகவல் | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | திணைக்களத்துக்கு இணைக்கப்பட்ட ஊழியர்களால் மேவுகை செய்யப்பட முடியாத பதவிகளுக்குப் புதிய ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2021 பெப்ரவரி 02 முதல் 2022 ஏப்ரல் மாதம் வரை ஒப்பந்த அடிப்படையில் 44 ஊழியர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | | |
| (இ) | 2021 பெப்ரவரி 02 முதல் ஒரு வருட காலத்திற்கு நிலையத்தின் பணிப்பாளர் முதலில் நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன் 2021 மார்ச் 02 முதல் ஒப்பந்த அடிப்படையில் பதவியணியினர் சமீபத்தில் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். எனினும் குறித்துரைக்கப்பட்ட பதவியணியொன்றிற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | பதவியணிக்காக அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |
| (ஈ) | 2021 பெப்ரவரி 17 முதல் 2022 ஏப்ரல் 08 வரை தேசிய அபிவிருத்திக்கான ஊடக நிலையத்தில் 44 உத்தியோகத்தர்கள் சேவையாற்றியிருந்த போதிலும் வருகைப் பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. எனினும் நிலையத்தின் பணிப்பாளரின் எழுத்துமூல பரிந்துரையின் பிரகாரம் குறித்த காலப்பகுதியில் சேவையாற்றிய உத்தியோகத்தர்களுக்கு ரூபா 18,637,988 தொகை படிகளாக செலுத்தப்பட்டிருந்தது. மேலும் குறித்த கொடுப்பனவுகள் தொடர்பான உறுதிச்சீட்டுக்கள் உத்தியோகத்தர்களால் கையொப்பமிடப்பட்டிருக்காததால், குறிப்பிட்ட உத்தியோகத்தரிற்கு குறிப்பாக கொடுப்பனவு கிடைத்ததை உறுதிப்படுத்த முடியவில்லை. | -மேற்படி- | வருகை பதிவேடுகள் முறையாக பேணப்பட வேண்டும். |
| (உ) | 2021 மார்ச் 02 இல் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டிருந்த இரண்டு ஊடக புலனாய்வு உத்தியோகத்தர்கள் மற்றும் ஒரு KKS 2021 செப்தெம்பர் 01 இல் பதவி விலகியிருந்ததுடன் | -மேற்படி- | பதவியணியினரிற்கு முறையாக அங்கீகாரம் பெறப்பட்டு அதற்கிணங்க நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | அந்த உத்தியோகத்தர்கள் அதே திகதியில் இருந்து உதவி பணிப்பாளர்களாக (ஊடகம் மற்றும் நிர்வாகம்) இரண்டு பதவிகளுக்கும் ஒப்பந்த அடிப்படையில் ஊடக புலனாய்வு உத்தியோகத்தர் பதவிக்கும் மீண்டும் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். | | எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | ''சௌபாக்யயே தக்ம'' என்ற தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான தகவல்களை பிரபலப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட தேசிய அபிவிருத்திக்கான ஊடக நிலையத்தின் பிரதான இணையத்தளம் mcnd.gov.lk என்ற domain இன் கீழ் பேணப்பட்டு வந்ததுடன் குறித்த இணையத்தளம் செயற்பாட்டில் இருக்கவில்லை. | -மேற்படி- | இணையதளம் நாளதுவரையாக்கப்பட வேண்டும். |

## 4. மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 158 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் 104 ஆகவும் காணப்பட்டன. இதன் விளைவாக 54 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் சிரேஷ்ட பதவிகளிலுள்ள 6 வெற்றிடங்கள் அதில் உள்ளடங்கியிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |